மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது பேசப்படுவது பரிசுச் சீட்டைப்பற்றி. அதைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்பு

(அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவரவர்களிட மிருந்து சட்டப் பேரவையின் 55-வது விதியின் கீழ் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரப்பெற்று இருக்கிறது. அதில்—

" This House expresses its want of Confidence in the Council of Ministers headed by the Hon. Thiru M. Karunanidhi'.' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானத்தைப் போலவே திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. க. இராமமூர்த்தி, திரு. கே. விநயகம், திரு. டி. மார்டின் ஆகிய நான்கு பேரும் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவருடைய தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு) கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி அளிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை உறுப்பினர்கள் எழுந்து நின்றிருக்கும் காரணத்தால் இத்தீர்மானத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக் கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள தீர்மானத்திற்கு அனுமதி அளித்து இருக்கும் காரணத்தால் திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. க. இராமமூர்த்தி, திரு. கே. விநயகம், திரு. டி. மார்ட்டின் ஆகியவர்கள் கொடுத்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

இத்தீர்மானத்தின் மீது விவாதத்திற்கான தேதியை பின்னர் அறிவிக்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

குமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. மார்ட்டின், திரு. பொன்னப்ப நாடார், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. ஆர். கருப்பையா ஆகியோர் குமரி மாவட்டத்தில் கடல் அரிப்பு பற்றி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் விளவங்கோடு அருகே இனயம் என்ற கிராமத்தில் 29—8—1970 அன்று இரவு கடல் தண்ணீர் ஊருக்குள் புகுந்ததன் விளைவாக இரண்டு பேர் இறந்தும், பல வீடுகள் இடிந்தும், கடல் நீர் ஊருக்குள் வந்துகொண்டிருக்கும் நிலையில் பக்கத்திலுள்ள இரயும்ன் துறை, ஊடலம் என்ற கிராமங்களுக்கு பேராபத்து ஏற்பட்டு உள்ளபடியால் அந்தப் பகுதியில் வாழும் மக்களின் உயிர், உடைமை களுக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது.

பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த விதமாகக் கடல் அரிப்பு சமீப காலத்தில் அநேக கிராமங்களில் ஏற்பட்டு இருக்கிறது. கடல் அரிப்பின் காரணமாக இருவர் உயிர் இழந்து இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஏராளமான வீடுகள் இடிந்து, அவைகளில் பெருத்த சேதம் ஏற்பட்டு இருக்கிறது என்பதும் தெரிய வருகிறது. குறிப்பாக, கடல் அரிப்பு திடீரென்று ஏற்படுகிறது. யாரிடத்திலும் சொல்லி வருவது கிடையாது. குறிப்பாக 100 அடி உயரத்தில் அலைகள் எழுகின்றன. அந்த அலை களின் காரணமாக ஊருக்குள் தண்ணீர் நுழைந்து சுமார் 15 அடி தண்ணீர் தேங்கி இருப்பதாகவும் அங்கே உள்ள மக்கள் நல்ல விதமாக அந்த கிராமத்தில் இல்லாததாலும் ரொம்ப உயிர்களுக்கு சேதம் ஏற்படவில்லை என்று கூறுகிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் கன்னியாகுமரிக்கு விழாவிற்காக சென்று இருந்தார்கள். விபத்தின் காரணமாக தண்ணீர் புகுந்த காரணத்தால் பக்கத்திலுள்ள சிறிய கிராமங்களுக்கு சேதம் ஏற்படக்கூடிய நிலையில் அங்கே ....

[An hon. Member was seen talking to the Officers in the Officers' Gallery.]

THIRU K. VINAYAKAM : Sir, I suggest that fence may be put up, so as to prevent any hon. Member from walking across and talking to. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் சொன்னால் கேட்கக்கூடியவர்கள் என்பது திரு. விநாயகத்திற்கு நினைவில் இருக்க வேண்டும்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, பக்கத்திலே உள்ள கிராமத்திலும் இது போன்று கடல் தண்ணீர் புகுந்து அங்கே உள்ளவர்களுக்குச் சேதம் விளைவிக்கும் நிலை இருக்கிற காரணத்தால் சாதாரணமாக கலெக்டர்கள் உடனடியாக சிற்சில காரியங்களைச் செய்தாலும், கடல் தண்ணீர் உள்ளே வராமல் செய்யக்கூடிய அளவில் பெரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு கலெக்டருக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

கடல் தண்ணீர் ஊருக்குள் வருவது அன்றாட நிகழ்ச்சி அல்ல. 100 அடி அலைகள் ஏற்படுவது அரசின் அன்றாட நிகழ்ச்சிக்கு உட்பட்டு வராது. திடீரென்று சேதம் விளைவிக்கிறது இது என்பதால் இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இப் பிரச்னையை விவாதிக்க வேண்டியது முக்கியமாகும்.

இந்தக் கடலில் நீண்ட நெடும் சுவர் கட்டும் திட்டத்தை உடனடியாக அரசு கவனத்தில் கொண்டு எந்த விதமாக அந்தப் பகுதி மக்களுக்கு அந்த விதமான ஆபத்து ஏற்படாத அளவில் செயல்பட வேண்டுமென்பதற்காக, அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உள்ளே இது வராது என்று திரும்பவும் கூறிக் கொண்டு இந்தச் சபையின் நடவடிக் கைகளை ஒத்தி வைத்து அந்தப் பகுதி மக்களுக்குப் பேராபத்து வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக சபை யின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குமரி மாவட்டத்தில் விளவங் கோடு அருகே இனயம் என்ற கிராமத்தில் 29—8—1970 இரவு கடல் தண்ணீர் ஊருக்குள் புகுந்ததின் விளைவாக 27 மீனவர் வீடுகள் இடிந்தன. 40 வயது மேரியா சில்வய் என்ற பெண்ணும், 9 வயதுடைய அவளுடைய பெண்ணும் சுவர் இடிந்து விழுந்ததனால் மரணமடைந் தனர். கடல் கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. கிராம மக்கள் அவ்விடத்திலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளி யேற்றப்படுகின்றனர். துயர் தணிப்பு வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவன செய்து வருகிறார். நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இதுபற்றிக் கலந்து பேசி மேலும் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வந்து இருக்கிறேன். ஆகவே, தகுந்த ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்ற காரணத்தால் இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய அளவிற்குரிய தீர்மானம் அல்ல என்பதை தங்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல்வர் கொடுத்த விளக்கத் திற்குப் பிறகு இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 23-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளில் 23-வது விதியை தளர்த்தி இப்பேரவை இன்று தனியார் அலுவல்களை எடுப்பதற்கு முன்பு கீழ்க்கண்ட சாதாரண அரசினர் அலுவல்களை நடத்த வேண்டுமென்ற இத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.